**28.03.2010**

**சான்மினா திட்டத்தை துவக்கி வைத்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை: –**

**சுகோதர சகோதரிகளே,**

**எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மற்றும் சேவையில் உலகில் 4வது இடத்தை வகிக்கும் குடிசவரநே 500 நிறுவனமான சான்மினா எஸ்சிஐ நிறுவனத்தின் சென்னை உற்பத்திப் பிரிவை துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சான்மினா நிறுவனம் தமிழகத்தில் உற்பத்திப் பிரிவை துவக்கியிருப்பது மகிழ்ச்சி தரக்கூடியது. இந்நிறுவனத்தினை நிறுவுவதற்கு சென்னையைத் தேர்ந்தெடுத்தமைக்காக சான்மீனா நிறுவனத்துக்கு எனது பாராட்டுதல்களையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.**

**சான்மீனா நிறுவனம் ரூபாய் 225 கோடி முதலீட்டில் எலக்ட்ரானிக்ஸ் வன்பொருள் திட்டத்தைத் துவக்க, மாநில அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் 19.06.2007 அன்று கையெழுத்திட்டது. இந்த நிறுவனம் துவக்கப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது அதை நான் 03.07.2009ல் பார்வையிட வந்தேன் என்பதை நினைவு கூறுகிறேன். இந்த துவக்க விழா தருணத்தில், இந்நிறுவனத்தின் முதலீடு ரூ. 225 கோடி என்பதை தாண்டி ரூபாய் 250 கோடியாக உள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் 1400 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 300 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கிறது. இங்கு பணிபுரிவோர்களில் 80 சதவீதத்திற்கும் மேலானோர் இந்நிறுவனத்தின் அருகில் உள்ள கிராமங்களைச் சார்ந்தவர்கள் என்பதை அறிந்து மகிழ்கிறேன். மேலும் அடுத்த 5 வருடங்களில் இந்நிறுவனத்தின் மூலம் வேலைவாய்ப்பு பெறுவோரின் எண்ணிக்கை 10000–த்தைத் தாண்டும் என்பதை அறிந்து அகமகிழ்கிறேன்.**

**இந்தியாவில் மட்டும் அல்ல, உலகெங்கும் வரும்காலங்களில் வன்பொருள் (electric hardware) உபயோகம் மிகுந்த அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மின்னணு பொருள்களின் உற்பத்தியில் இந்தியாவைப் பொறுத்த வரையில் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே பெரிய இடைவெளி உள்ளது.**

**இந்த இடைவெளியும் வருங்காலங்களில் அதிகரிக்கும். இது உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பளிக்கும்.**

**இந்தியாவில் தகவல் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் மின்னணு சாதனங்களின் (electric hardware) உற்பத்தி வளர்ச்சியினை அதிகரிக்க ஆலோசனை வழங்கும் குழுவின் அறிக்கையின்படி, மின்னணு சாதன உற்பத்தி தொழிலில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (**GDP**), வேலைவாய்ப்பு, செயற்முறையினை நவீனப்படுத்துதல், நாட்டின் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றை கணிசமாக அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. மின்னணு பொருட்களின் உற்பத்தியில் மனித ஈடுபாடு அதிகமாகக் கொண்டது என்பதால், எலக்ட்ரானிக் தொழில் நாட்டில் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும். இது, நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு பெருக்க விகிதத்தின் படி 6.3 சதவீதமாக இருக்கும். இந்தக் காரணத்திற்காக, மின்னணு பொருட்கள் உற்பத்தி திட்டங்களை தமிழகத்திற்கு ஈர்க்கப்படுதல் அவசியம்.**

**உலகின் தலைசிறந்த 5 இ.எம்.எஸ் தயாரிப்பாளர்களில், மூன்று நிறுவனங்கள், அதாவது ஃபாக்ஸ்கான், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் மற்றும் சான்மீனா, சென்னையை தங்களது தயாரிப்பு அலகுகளைத் கொண்டுள்ளது என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். சான்மீனா நிறுவனத்தைத்தவிர, நமது அரசால் ஈர்க்கப்பட்ட பெரிய எலக்ட்ரானிக் வன்பொருள் திட்டங்களில் மோட்டரோலா, டெல், சாம்சங், டெஸ்ஸால்வ் செமி கண்டக்டர், வீடியோகான், நோக்கியா சீமென்ஸ், சிக்னட் ஸோலார் மற்றும் மோஸர் பீர் ஆகிய நிறுவனங்கள் அடங்கும். இந்த 9 பெரிய மின்னணு சாதன உற்பத்தி திட்டங்கள் (**electric hardware manufacturing**) மூலமாக 8000 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டு, 45000–க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு ஏற்பட்டுள்ளது.**

**இதைதவிர, நோக்கியா நிறுவனத்தின் முதல் தொழிற்சாலை 2006ல் தொடங்கப்பட்டு இருமுறை விரிவாக்கம் செய்யப்பட்டு, கைப்பேசிகள் தயாரிப்பில் உலகியேலே மிகப்பெரிய தொழிற்சாலையாகத் நோக்கியா திகழ்கிறது. 2006–ல் கைபேசிகள் தயாரிப்பில் நோக்கியா மற்றும் இதர நிறுவனங்களால் நடத்தப்பட்ட**

ஆய்வுகள் சென்னை, சீனாவைவிட விலை மற்றும் போட்டி தன்மையில் சிறந்து விளங்குகிறது என குறிப்பிடுகின்றன.

இன்று, தமிழ்நாடு முதலீட்டு ஈர்க்கும் தலைசிறந்த மாநிலமாக திகழ்கிறது. ஆக்ஸ்ஃபோர்டு அனலிடிகா என்ற ஒரு பன்னாட்டு தனியார் ஆலோசனை நிறுவனம் ஆக்ஸ்ஃபோர்டு மற்றும் உலகத்திலுள்ள பல பிரபல பல்கலைக்கழகங்களில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆலோசகர்கள் அடங்கிய நிறுவனம் ஆகும். சமீபத்தில் இந்த நிறுவனம் இந்தியா டீகன்ஸ்ட்ரக்டட் (India Deconstructed) என்ற ஒரு ஆய்வினை நடத்தியது, இதன்படி, தமிழகம் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே முதன்மையாக விளங்குகிறது. இதற்குக் காரணமாக, தமிழ்நாட்டின் தரமான உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள 28 மாநிலங்களையும் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களையும் பகுப்பாய்வு செய்து முதலீடு செய்ய தமிழ்நாடே மிகச்சிறந்த மாநிலம் என்று இந்த ஆய்வு அறிவித்துள்ளது.

சென்னை தற்போது, மின்னணு சாதன தயாரிப்பில் (electric hardware manufacturing) பெரிய உற்பத்தி மையமாக உருவாகியுள்ள நிலையிலும், நமது நாட்டைப் பொறுத்தவரை, எலக்ட்ரானிக் உபகரணங்களுக்கு இறக்குமதியையே நம்பியுள்ளோம். நமது நாட்டின் இறக்குமதி தேவையின் அளவு 75 முதல் 85 சதவீதமாக உள்ளது. இந்த இறக்குமதியை ஈடுகட்ட, உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்க உள்ள வாய்ப்பினை பறைசாற்றுகிறது. இதற்கு மாறாக, ஆட்டோமொபைல் திட்டங்களில், உள்நாட்டு உற்பத்தி 80 முதல் 85 சதவீதமாக உள்ளது. இதன் காரணம் ஆட்டோ உதிரிபாகளை தயாரிப்பதில் உற்பத்தி நிறுவனங்கள் அதிக அளவில் நிறுவப்பட்டுள்ளதே ஆகும்.

இதைப்போலவே, எலக்ட்ரானிக் உபகரணங்கள் உற்பத்தி நிறுவனங்களும் தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்ய அரசு அக்கறை கொண்டுள்ளது. எலக்ட்ரானிக் உபகரண உற்பத்தியாளர்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வேண்டும் என இத்தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இத்தருணத்தில், ஒரு

பி.சி.பி தயாரிக்கும் தொழிற்சாலையை தமிழ் நாட்டில் தொடங்குமாறு சான்மீனா நிறுவனத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கான அனைத்து உதவிகளையும், ஒத்துழைப்பையும் அரசு வழங்கும்.

தமிழ்நாடு, குறிப்பாக சென்னை, தகவல் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்குகிறது. உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவு இருந்தபோதிலும், நமது மாநிலத்திலிருந்து தகவல் தொழில் நுட்பத்துறையில் 2007–08–ல் 28,426 கோடி ரூபாயாக இருந்த ஏற்றுமதி 2008–09–ல் 36,680 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்த 29 சதவீத வளர்ச்சியில், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களின் வளர்ச்சியை ஒப்பிடும்போது, தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

மின்னணு சாதன உற்பத்தியில் (electric hardware manufacturing) நமது நாடு, உலக சக்திபீடமாக மாற வல்லமை பெற்றுள்ளது என நான் நம்புகிறேன். அதில்,மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலோடு சிறந்த மின்னணு சாதன உற்பத்தியில், தமிழ்நாடு ஒரு பெரும் புகழிடத்தைத் வென்றெடுக்க ஆர்வமாக உள்ளது.

இந்த சான்மினா நிறுவனத்தை, இன்று நான் துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த தருணத்தில், மாநில அரசு தனது நீடித்த ஒத்துழைப்பையும், உதவியையும் சான்மீனா நிறுவனத்திற்கு என்றும் நல்கும் என உறுதியளிக்கிறேன்.

சான்மினா பெரும் வெற்றிபெற எனது வாழ்த்துக்கள்.